**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-40** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : உதயக்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 06th day of March 2024.

(குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். 1 ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2 ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4 ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி, 5 ம் எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ், 6 ம் எதிரி கேசவன், 7 ம் எதிரி அரவிந்த்குமார் (எ) அரவிந்த், 8 ம் எதிரி தமிழரசன், 9 ம் எதிரி அஜீத்குமார், 10 ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 12 ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்.

11 ம் எதிரி கலைச்செல்வன் ஆஜர் இல்லை. 11 ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

3 ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு SPL.SC. 11/2023 நிலுவையில் இருந்து வருகிறது)

**முதல் விசாரணை**

நான் தற்போது குளித்தலை காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 18.09.2020 அன்று காலை கரூர் நகர காவ்லநிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் உதவி ஆய்வாளர் பெரியசாமி என்பவர் பதிவு செய்த நி.கு.எண். 1031/2020

ச/பி. 302 இதச வழக்குக்கோப்பை காலை 11.45 மணிக்கு எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்னர், இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்று, கரூர் - ஈரோடு ரோடு டேன்சி கம்பெனிக்கு எதிரேயுள்ள இளநீர் கடை முன்புள்ள சம்பவ இடத்திற்கு சென்று, சம்பவ இடத்தை சாட்சிகள் தீபக், காமராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயாரித்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.49. பின்னர், அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் காணப்பட்ட இரத்தக்கறை படிந்த வெட்டி எடுக்கப்பட்ட டைல்ஸ் துண்டுகள் இரண்டையும், இரத்தக்கறை படியாத வெட்டி எடுக்கப்பட்ட டைல்ஸ் துண்டுகள் இரண்டையும் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர், மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர், மதியம் 13.30 மணிக்கு வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என்பவரின் பிரேதத்தை கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பார்வையிட்டேன். பின்னர் சம்பவ இட சாட்சிகள் சஷ்மிதா, பெரியசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 13.45 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தி, பிரேத விசாரணை அறிக்கை தயாரித்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.50.

19.09.2020 அன்று, இவ்வழக்கின் சாட்சிகள் பிரவீன், கார்த்திக், கோவிந்தராஜ், மணியம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேற்படி விசாரணையிலிருந்து, முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அஜீத்குமார் என்பவர் இவ்வழக்கில் சம்மந்தப்படவில்லை என தெரியவந்ததால், அவரது பெயரை இவ்வழககிலிருந்து நீக்கம் செய்தும், மற்றும் எதிரிகள் பாண்டி (எ) துரைப்பாண்டி, பிரேம்குமார், R.S.மணி (எ) மணிகண்டன், தமிழரசன், அஜீத், கலைச்செல்வன், செந்தில், அரவிந்த் (எ) அரவிந்த்குமார் ஆகியோர்களை இவ்வழக்கில் எதிரிகளாக சேர்த்தும், எதிரி நீக்கம் மற்றும் சேர்த்தல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அன்றைய

தினமே இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச 302 லிருந்து இதச 302 உ/இ. 34, 120(பி), 506 (ii) ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து, சட்டமாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.51.

பின்னர், 20.09.2020 அன்று இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்தேன்.

21.09.2020 அன்று வழக்கில் கைப்பற்றிய தடயங்களை நீதிமன்றம் மூலமாக வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருச்சிக்கு பரிசோதனைக்கு அனுப்பி வைப்பதற்காக காவலர் 1618 ரவிக்குமார் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

22.09.2020 அன்று வழக்கின் எதிரிகள் கரூர் பஸ்நிலையம், மதுரை மார்க்கம் பஸ்நிறுத்தத்தில் நின்றுக்கொண்டுள்ளனர் என கிடைத்த தகவலின்பேரில் அங்குச்சென்று, வழக்கின் எதிரிகள் தமிழரசன், அஜீத், கலைச்செல்வன் ஆகியோர்களை முறைப்படி கைது செய்தும், பின்னர் பாதுகாப்பு கருதி எதிரிகளை நிலையம் கொண்டு வந்து, வரவழைக்கப்பட்ட சாட்சிகள், பிரகாஷ், சுலோச்சனா ஆகியோர் முன்னிலையில் எதிரி தமிழரசன் என்பவரை விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி, தமிழரசன் வீட்டின் பின்புறம் பள்ளப்பட்டி சௌந்தராபுரத்திற்கு சென்று, அங்கு மறைத்து வைத்திருந்த TN 38 AE 4282 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோஹோண்டா சிடி டீலக்ஸ் இருசக்கர வாகனத்தை எதிரி தமிழரசன் எடுத்து ஆஜர் செய்ததை, அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.

பின்னர் 23.09.2020 அன்று, இவ்வழக்கில் சாட்சிகள் அஜீத்குமார், தனபால், சசிதரன், தினேஷ், டாக்டர் அன்பழகன், டாக்டர் விக்னேஷ்வரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

28.09.2020 அன்று வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளான கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன், பாண்டி (எ) துரைப்பாண்டி, மணி (எ) மணிகண்டன் ஆகியோர்கள் சிவகங்கை நீதிமன்றத்தில் சரண்டரான விவரம் கிடைத்த தகவலின்பேரில், அவர்களை போலீஸ்காவலில் எடுத்து விசாரிப்பதற்கு, குற்றவியல் நீதிமன்றத்தில் மனு மற்றும் பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்தேன்.

29.09.2020 அன்று, மேற்படி எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, அன்றைய தினம் மாலை 17.00 மணிக்கு நீதிமன்ற உத்தரவுப்படி எதிரிகளை போலீஸ் காவலுக்கு எடுத்தேன். பின்னர் 18.00 மணிக்கு எதிரிகளை நிலையத்திற்கு கொண்டு வந்து, பாரா வசம் ஒப்படைத்தேன். மாலை 19.00 மணிக்கு வரவழைக்கப்பட்ட சாட்சிகள் அங்குராஜ், சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் என்பவரை விசாரித்தபோது, தன்னிச்சையாக அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். இரவு 9.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி பாண்டி (எ) துரைப்பாண்டியை விசாரித்தபோது, அவர் தன்னிச்சையாக அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

பின்னர் 30.09.2020 அன்று காலை 6.00 மணிக்கு R.S.மணி (எ) மணிகண்டன் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், எதிரிகளை அழைத்துக்கொண்டு, சாட்சிகளுடன் 30.09.2020 அன்று காலை 9.30 மணிக்கு எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன், கரூர் - அரவக்குறிச்சி ரோடு, கொத்தப்பாளையம் பிரிவுக்கு வடக்கே, வேலமரத்திற்கு அருகில் முட்புதரில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த அருவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் 10.15 மணிக்கு, எதிரி பாண்டி (எ) துரைப்பாண்டி, அதே இடத்தில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்த மற்றொரு இரத்தக்கறை படிந்த அருவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர், பள்ளப்பட்டி - பழனி சாலை, சௌந்தராபுரம் அங்கன்வாடி மையத்திற்கு பின்புறம் மறைத்து வைத்திருந்த KTM வெள்ளை நிற பதிவு எண் இல்லாத இருசக்கர வாகனத்தை எதிரி மணி (எ) மணிகண்டன் எடுத்து ஆஜர் செய்ததை 11.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர், எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் என்பவர் 12.00 மணிக்கு பள்ளப்பட்டி - பழனி ரோடு பாப்பநாயக்கன்பட்டி

பிரிவுக்கு வடக்கே உள்ள பாறைக்கு அடியில் உள்ள சீத்தமுள் புதரில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த சந்தனக்கலர் காட்டன் ஜீன்ஸ் பேண்ட் ஒன்றையும், இரத்தக்கறை படியாத முழுக்கை சட்டை ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர், 12.30 மணிக்கு அதே இடத்தில் பாண்டி (எ) துரைப்பாண்டி என்பவர் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த புளூ கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்றையும், இரத்தக்கறை கருப்பு கலர் முழுக்கை சட்டையையும், அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். கைப்பற்றிய தடங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர், அன்றைய தினம் மாலை 15.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரி அரவிந்த் (எ) அரவிந்த்குமார் கரூர் - வேலூர் சேரன் பள்ளி பஸ்டாப் அருகே நின்றுக்கொண்டிருந்தவரை கைது செய்து, நிலையத்திற்கு கொண்டு வந்து, பாரா வசம் ஒப்படைத்தேன். அன்றைய தினம் மாலை 7.00 மணிக்கு, இவ்வழக்கின் எதிரி கேசவன் என்பவரை கரூர் - மதுரை பைபாஸ் சாலை பெரியார் ஆர்ச் அருகில் உள்ள மண்டிக்கடை முன்பு வைத்து காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து, பாரா வசம் ஒப்படைத்தேன்.

பின்னர், போலீஸ் காவலில் எடுத்த எதிரிகள் மூவரையும், மற்றும் கைது செய்த எதிரிகளையும் நீதிமன்றக்காவலில் ஒப்படைத்தேன்.

பின்னர், 01.10.2020 அன்று, இவ்வழக்கில் இறந்த நபர் பட்டியல் சாதியை சேர்ந்தவர் என்பதால், வழக்கின் எதிரிகள் கோகுல் என்பவரை தவிர மற்ற எதிரிகள் பட்டியல் அல்லாத சாதியை சேர்ந்தவர்கள் என்பதாலும், வழக்கின் சட்டப்பிரிவை இதச 302 உ/இ. 34, 120(பி), 506(ii) லிருந்து இதச 302 உ/இ. 34, 120(பி), 506(ii) உ/இ. 3(2) (v) பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து, சட்டமாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 01.10.2020 சட்டமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.52.

பின்னர், இவ்வழக்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை, நாள். 01.10.2020 உத்தரவின்படி வழக்குக்கோப்பை கரூர் நகர காவல்துணை கண்காணிப்பாளர் வசம் மேல்விசாரணைக்காக அனுப்பி வைத்தேன்.

இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**1** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309, 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**2, 6, 8, 9, 12 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2, 8, 9, 12 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில், மூத்த வழக்கறிஞர் மதுரையில் உள்ளார் என்றும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309, 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.4 அஸ்வினி என்பவரை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

**<u>7 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.3 பிரவீன் என்பவர் என்னுடைய விசாரணையில் அவருக்கு வேறு பெயர் உள்ளது என்று கூறவில்லை. அ.சா.3 பிரவீன் என்னுடைய விசாரணையில் 17.09.2020 அன்று இரவு 11 மணிக்கு அண்ணா நகர் கறிக்கடை அருகே அவரது நண்பர் கார்த்திக் உடன் "மோட்டார் சைக்கிளில்" சென்றேன் என வாக்குமூலம் அளிக்கவில்லை. என்னுடைய புலன் விசாரணையின்போது சதித்திட்டம் தீட்டிய இடத்தை நான் நேரில் சென்று பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். அந்த இடத்தை பார்வையிட்டதற்கு நான் வரைபடம் தயார் செய்யவில்லை.

அ.சா.10 கார்த்திக் என்னுடைய விசாரணையின்போது 17.09.2020 அன்று இரவு 11 மணிக்கு அண்ணா நகர் கறிக்கடை அருகே அவரது நண்பர் கார்த்திக் உடன் "மோட்டார் சைக்கிளில்" சென்றேன் என வாக்குமூலம் அளிக்கவில்லை. அ.சா.3 மற்றும் அ.சா.10 சாட்சிகள் பின்னிட்டு யோசனையின்பேரில் தயார் செய்யப்பட்ட சாட்சிகள் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் 7 ஆம் எதிரியை கைது செய்தேன் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. 7 ஆம் எதிரியை 27.09.2020 அன்று மாலை 5.30 மணிக்கு அவர் பணிபுரிந்த வந்த நிறுவனத்தில் இருந்து கைது செய்து அழைத்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 7 ஆம் எதிரிக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. 7 ஆம் எதிரிக்கு சம்மந்தப்பட்ட வாகனம் இல்லை என்றால் எதிரியின் Verna வாகனம் சம்மந்தப்பட்டது என விசாரணையில் தெரிந்துகொண்டேன், ஆனால் அந்த வாகனத்தை நான் 7 ஆம் எதிரியிடம் இருந்து கைப்பற்றவில்லை. 7 ஆம் எதிரியினுடைய வாகனம் வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளது என்பதை எந்த சாட்சி விசாரணையின் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன், மணி (எ) மணிகண்டன், பாண்டி (எ) துரைபாண்டி ஆகியோரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் இருந்து தெரிந்து கொண்டேன். மேலும்

சாட்சிகள் அங்குராஜ், சுரேஷ்குமார் ஆகியோர்களின் வாக்குமூலங்களில் இருந்தும் தெரிந்து கொண்டேன். எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தை பொய்யாக தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 18.09.2020 அன்று பிரேத விசாரணையின்போது சாட்சி பிரவீன் உடன் இருந்தார் என்றால் சரியல்ல. நான் சாட்சி பிரவீனை முதன் முதலாக எப்போது பார்த்தேன் என்றால் 19.09.2020 அன்று அவரை பார்த்து விசாரித்தேன். சாட்சி பிரவீன் என்பவரை 18.09.2020 அன்று அப்போலோ மருத்துவமனையிலும், கரூர் அரசு மருத்துவ மனையிலும் விசாரித்தேன் என்றால் சரியல்ல. அந்த விசாரணை வாக்குமூலத்தை மறைத்துவிட்டு வழக்கிற்காக 19.09.2020 அன்று அவரை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

<u>11 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 முதல் 6 சாட்சிகள் இறந்துபோனவரின் உறவினர்கள். அவர்களை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் அஸ்வினி என்பவரை தவிர மற்றவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் மேற்சொன்ன விசாரித்த சாட்சிகளுக்கு இறந்துபோனவர் பட்டியல் ஜாதியை சேர்ந்தவர் என்ற விபரம் எதிரிகளுக்கு தெரியும் என என்னுடைய விசாரணையில் துலங்கவில்லை. இறந்துபோன நபரும், 1 வது எதிரியும் ஒரே ஜாதியை சேர்ந்தவர்கள். அ.சா.10 இவ்வழக்கில் குற்றசதிக்காக என்னால் பின்னிட்டு தயார் செய்யப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல. அதனால்தான் அவர் எதிரிகளை தவறுதலாக அடையாளம் காட்டியுள்ளார் என்றால் சரியல்ல. 11 ம் எதிரிக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>10 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்மந்தப்பட்ட புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 18.09.2020 ஆகும். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டது என்றால், அன்றே கொடுக்கப்பட்டது. புகாரில் எந்த எதிரிகள்

பெயர் குறிப்பிடப்பட்டது என்றால் கோகுல், அஜித்குமார், மணி மற்றும் இரண்டு நபர்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. சம்பவ இடத்திற்கு மதியம் 12 மணிக்கு சென்று நான் ஆய்வு செய்தேன். 10 ம் எதிரியை நான் கைது செய்யவில்லை. 10 ம் எதிரிக்கும் வழக்குக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.